**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-20** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : காளிதாஸ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 09th day of August 2023.

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த்குமார் (எ) அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர். 3ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு SPL.SC. 11/2023 நிலுவையில் இருந்து வருகிறது)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர் நகர காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்து, அயல்பணியாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தொலைத்தொடர்பு நோடல்பிரிவு சம்மந்தமாக குற்றவழக்கு சம்மந்தப்பட்ட அழைப்பு விவர அறிக்கைகள் சம்மந்தப்பட்ட பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக விசாரணை அதிகாரி கரூர் நகர காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில், வழக்கு சம்மந்தப்பட்ட எதிரிகள் காவியா ரமேஷ், கேசவன், கோகுலகிருஷ்ணன், கலைச்செல்வன், மணிகண்டன் ஆகியோர்களுடைய அழைப்புவிவரங்களை கரூர் …..

காவல் கண்காணிப்பாளர் அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு வந்த அறிக்கைகளை விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த மின்னஞ்சல் மூலம் வந்த அறிக்கைகளை நகல் எடுத்து, காவல்துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் கண்காணிப்பாளரின் வாய்மொழி உத்தரவுப்படி மின்னஞ்சல் மூலம் வந்த அறிக்கைகளை நகல் எடுத்தேன். மேற்சொன்ன எதிரிகளின் அழைப்பு விவர அறிக்கைகளின் நகல் எடுத்து காவல்துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக நான் பணிநியமனம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது, நான் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் பணிபுரிந்த விவரத்தை கூறினேன். நான் கரூர் காவல்நிலையத்திலிருந்த மின்னஞ்சலுக்கு வந்த அறிக்கையை எடுத்து காவல்துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். கரூர் நகர காவல்நிலையம், காவல்துணை கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டில் உள்ளது. கரூர் நகர காவல்நிலைய கணிணியிலுள்ள அழைப்பு விவரப்பட்டியலை என்னை வைத்து எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சம்மந்தப்பட்ட தேதியில் நான் அந்த பணியில் இல்லை என்றால் சரியல்ல. 20.10.2020 அன்று காவல்துணை கண்காணிப்பாளரிடம் நான் அறிக்கையை கொடுத்தேன். கணிணி பதிவுகளை பிரிண்ட் எடுத்ததற்கும், எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-21** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 09th day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் தற்போது அரவக்குறிச்சி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று கரூர் நகர காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்தபோது, கு.எண். 1031/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் உத்தரவுப்படி, கரூர் காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திலும், குற்ற ஆவண காப்பகத்திலும், தனிப்பிரிவு அலுவலகத்திலும், காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் கடவுச்சீட்டு பெற்று, ஒப்படைத்தேன்.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-22** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவிக்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 09th day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வெங்கமேடு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று கரூர் நகர காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்தபோது, உதவி ஆய்வாளர் உத்தரவின்படி, கு.எண். 1031/2020 வழக்கில் சம்மந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக மதியம் 12.00 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து பெற்று, 12.30 மணிக்கு கரூர், நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்து, காவல்நிலையத்திற்குதிரும்பினேன்.

பின்னர் ஆய்வாளர் உத்தரவுப்படி, கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த கிருஷ்ணமூர்த்தி பிரேதத்தை உடற்கூறாய்வுக்கு தபாலை பெற்றுச்சென்ற, மருத்துவர் மணிவாசகத்திடம் ஒப்படைத்து, பிரேதத்தை மருத்துவரிடம் அடையாளம் காட்டினேன். உடற்கூறாய்வுக்கு பிறகு, பிரேதத்தை இறந்தவரின் உறவினரிடம் ஒப்படைத்தேன். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி பிரேதத்திலிருந்து பெறப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பெற்றுக்கொண்டு, மருத்துவமனையில் அதை வைத்தேன். பின்னர், இறந்துபோன பிரேதத்திலிருந்த உடைகளை பெற்று நிலையத்தில் ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து ஊதா, கருப்பு, வெள்ளை கலர் கலந்த கைலி, காப்பி கலரில் ராம்ராஜ் என்ற எழுதியிருந்த ஜட்டி, கருப்பு நீலம் கலந்த அரைக்கை சட்டை ஆகியவற்றை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் ஒப்படைத்த ஊதா, கருப்பு, வெள்ளை கலர் கலந்த கைலி சா.பொ.12, காப்பி கலரில் ராம்ராஜ் என்ற எழுதியிருந்த ஜட்டி சா.பொ.13, கருப்பு நீலம் கலந்த அரைக்கை சட்டை சா.பொ.14. நான் ஆய்வாளரிடம் அளித்த அறிக்கை அ.சா.ஆ.19. மருத்துவமனையிலிருந்த உடல் உள்ளுறுப்புகளை திருச்சி, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன்.

பின்னர், 03.11.2020 அன்று நீதிமன்றத்திலிருந்து வழக்குச்சொத்துக்களை பெற்று, திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன்.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>**1, 2, 4, 6** முதல் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கரூர் நகர காவல்நிலையத்திலிருந்து, கரூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் 7-8 கி.மீ. தூரத்தில் உள்ளது. என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளது. இருசக்கர வாகனத்திலிருந்து கரூர் நகர காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு 10 – 15 நிமிடத்தில் வந்தேன். அன்றைய தினம் நான் பேருந்தில் வந்தேன். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் ஒப்படைத்த அன்று கொரோனா பொதுமுடக்கம் இருந்தது என்றால் தளர்வுகளுடன் இருந்தது. அன்றைய தினம் பொதுப்போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல.

**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சான்றுபொருட்களை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது, நான் அவரிடம் கடவுச்சீட்டை ஒப்படைக்கவில்லை. காவல்நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-23** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 09th day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு அலுவலகத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வரும் மின்னஞ்சல்களை சம்மந்தப்பட்ட காவல்நிலையங்களுக்கு அனுப்பி வைப்பேன். கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக காவியாரமேஷ், பிரேம்குமார் ஆகியோருடைய அழைப்பு விவர அறிக்கைகள் நோடல் அதிகாரியிடமிருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மின்னஞ்சலுக்கு வந்தது. அந்த

அழைப்பு விவரங்களை சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். பிரேம்குமார், காவியாரமேஷ் ஆகியோரின் செல்போன் எண்கள் எனக்கு தற்போது ஞாபகமில்லை.

**1, 2, 4, 6** முதல் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்னபடி பிரேம்குமார் என்பவரின் செல்போன் அழைப்பு விவரங்களை நோடல் அதிகாரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவில்லை என்றும், அந்த அறிக்கைகளை நான் சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரேம்குமாரின் செல்போன் அழைப்பு விவரங்களை நான் அனுப்பி வைத்தேன் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காவியாரமேஷ் சம்மந்தப்பட்ட அறிக்கைகளை அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-24** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துச்சாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 09th day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று கரூர் நகர காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது, அதிகாலை 3.45 மணிக்கு கரூர் நகர காவல்நிலையத்தில் RO பணியில் இருந்தபோது, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புறக்காவல்நிலைய இன்டிமேசன் நெம்பர் 5737ல் பிரேம்குமார், த/பெ.சண்முகம், வையாபுரி நகர் இரண்டாவது கிராஸ், கரூர் என்பவரை அடையாளம்

தெரியாத நபர்கள் கம்பியால் தாக்கியதாக வரப்பட்ட தகவலின்பேரில், நான் மருத்துவமனைக்கு சென்று, மருத்துவரை விசாரித்தபோது, மேற்படி பிரேம்குமார் என்பவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற விருப்பமில்லாமல் வெளிநோயாளியாக சென்றுவிட்டதாக கிடைத்த தகவலைப்பெற்று, பின்னர் 5.30 மணிக்கு நிலையத்திற்கு திரும்பி வந்து, அதை நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். அந்த விவரத்தை காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன்.

பின்னர், பிரேம்குமார் முகவரிக்கு சென்று விசாரித்தபோது, அவரைப்பற்றி முழுமையாக தெரியவில்லை. பிரேம்குமார் அவர் முகவரியில் இல்லை.

இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் 28.12.2020 அன்று அவரது முகாம் அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார். நான் அப்போது நிலைய பொதுநாட்குறிப்பை ஒப்படைத்தேன்.

நான் மருத்துவமனைக்கு சென்றபோது, மருத்துவரிடமிருந்து விபத்து பதிவேட்டு நகலை பெற்றுவந்து, காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

<u>**1, 2, 4, 5, 6, 8** முதல் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை அன்றைய தினம் நிலையப்பொறுப்பு அதிகாரியாக ஆய்வாளர் நியமித்திருந்தார். ஆய்வாளருக்கு அந்த அதிகாரம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நிலையப்பொறுப்பு அதிகாரியாக அன்றைய தினம் பணிபுரிந்தேன் என்பதற்கு என்னுடைய டைரியில் நான் குறித்தேன். எனது பாக்கெட் டைரியை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். எனது பாக்கெட் டைரியில் நான் நிலைய பொறுப்பு அதிகாரியாக பணிபுரிந்தேன் என்பதை எழுதினேன். அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. நான் அதிகாலை 3.45 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் இருந்தஅலுவல் மருத்துவரை சந்தித்தேன். அவர் பெயர் ஞாபகமில்லை. எனக்கு புறக்காவல்நிலையத்திலிருந்து தலைமைக்காவலர் 1719 பழனிவேல் என்பவர் தகவல் கொடுத்தார். மேற்சொன்ன விவரத்தை பொதுநாட்குறிப்பில் குறித்தேன். தலைமைக்காவலர் பெயரை குறிப்பிடவில்லை. பொதுநாட்குறிப்பை நான் காவல்துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். நான் பொதுநாட்குறிப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். எனக்கு கிடைத்த தகவல் சீரியஷான வழக்கு கிடையாது என்றால் அவ்வாறு கூற முடியாது. இரண்டு தெரிந்த நபர்கள் மற்றும் நான்கு தெரியாத நபர்கள் தாக்கினார்கள் என எனக்கு தகவல் வந்தது. 18.09.2020 அன்று காலை

7.00 மணிக்கு நான் அரசு மருத்துவமனைக்கு சென்று வந்த விவரத்தை ஆய்வாளரிடம் தெரிவித்தேன். அப்போது ஆய்வாளர் எனது வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை. கு.எண். 1031/2020 வழக்கு கரூர் நகர காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கு.எண். 1031/2020 வழக்கு DSP விசாரணைக்கு எப்போது அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்னபடி அதிகாலை 3.45 மணிக்கு க்ரூர், அரசு மருத்துவமனை புறக்காவல்நிலையத்திலிருந்து தகவல் பெற்று, கரூர் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில், அவசரபிரிவு மருத்துவரை சந்திக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் நான் விபத்து பதிவேட்டு நகலை பெற்று, ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. பிரேம்குமார் என்பவரின் வீட்டிற்கு சென்று பார்த்தேன் என்றும், அங்கு அவர் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவமனை புறக்காவல்நிலையத்திலிருந்து தகவல் வருவதற்கு முன்பு பிரேம்குமார் யாரென்று எனக்கு தெரியாது. நான் எனது உயரதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து பதிவேட்டு நகல் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.